யா/ கரணவாய் தாமோதர வித்தியாலயம்

கரவெட்டி

# நூற்றாண்டு விழாவும்

# பரிசளிப்பும்

## 1911 - 2011

## (2011.11.05)

# அதிபர் அறிக்கை

# அதிபர் அறிக்கை

எமது பாடசாலையின் நூற்றாண்டு விழாவும் பரிசளிப்புமாகிய இன்றைய தினம் வருகை தந்திருக்கும் மதிப்புக்குரிய பிரதம விருந்தினர் திரு. இ. பொன்னம்பலம் அவர்களே! மதிப்பிற்குரிய எமது வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. வ. செல்வராஜா அவர்களே! மதிப்பிற்குரிய கலாநிதி திரு. சி. சிறிசற்குணராசா அவர்களே! வணக்கத்திற்குரிய வல்வை முத்துமாரியம்மன் பிரதமகுரு திரு. தண்டபாணிதேசிகர் அவர்களே! கல்வி அதிகாரிகளே! அதிபர்களே எமது பாடசாலை மாணவச் செல்வங்களே! பா. அ. சங்க உறுப்பினர்களே! பெற்றோர்களே, பழைய மாணவர்களே! நலன்விரும்பிகளே! அனைவருக்கும் எனது வணக்கம்.

எமது பாடசாலையின் நூறுவருட சேவையை பூர்த்தியையிட்டும் இப்பாடசாலையின் நிறுவுநர் திரு. இ. தாமோதரம்பிள்ளை அவர்களை நினைவு கூர்ந்தும் இவ்நூற்றாண்டு விழா கொண்டாடப்படுகிறது. அத்துடன் பாடசாலையின் பரிசில் தினமும் இணைத்து கொண்டாடுகிறோம் இவ்விழாவுக்கு நிறுவுநர் தாமோதரம்பிள்ளையின் பேரன் திரு. இ. பொன்னம்பலம் அவர்களை பிரதம விருந்தினராக அழைத்ததையிட்டு நான் மகிழ்வடைகிறேன். இவர் பாடசாலையில் ஆரம்பக் கல்வியை கற்றுள்ளார். கல்வி உலகில் புகழ் மிக்க பௌதீக ஆசிரியராக விளங்க பலமான அத்திவாரமாக ஆரம்பக்கல்வியை இப்பாடசாலை வழங்கியது என்றால் அது மிகையாகாது.

அடுத்து எமது சிறப்பு விருந்தினர்களாக வருகைதந்துள்ளவர்களில் எமது வலயக் கல்விப் பணிப்பாளர் மதிப்புக்குரிய திரு. வ. செல்வராஜா அவர்கள் இப்பாடசாலையின் தேவைகளைக் கேட்டு திணைக்களரீதியாக செய்யக்கூடியவற்றை செய்து தந்துள்ளார். அதற்கு எடுத்துக்காட்டாக கணனி அறையும், அவசிய திருத்தமாக

செய்யப்பட்ட தரம் 4 வகுப்பறைக் கட்டடமும் இருக்கின்றன. அத்துடன் 2012 ஆம் ஆண்டிலிருந்து தரம் 1க்கு இரு வகுப்புக்கள் ஆரம்பிப்பதற்கான அனுமதியையும் தந்துள்ளார். அவரையும் சிறப்பு விருந்தினராக அழைத்ததையிட்டு நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

அதேபோல சிறப்பு விருந்தினர்களில் ஒருவரான கலாநிதி திரு. சி. சிறிசற்குணராஜா அவர்களும் இப்பாடசாலையில் ஆரம்பக்கல்வியை கற்றவர் புகழ்பூத்த கல்விமானாக கணிதத்துறை பேராசிரியராக விளங்க பலமான ஆரம்பக்கல்வியை வழங்கியது எமது பாடசாலையாகும். இப்பாடசாலையின் நலனில் அக்கறைகொண்ட பழைய மாணவருமாவார். எனவே இவ்விழாவுக்கு அவரையும் சிறப்பு விருந்தினராக அழைத்ததையிட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன்.

அடுத்து சிறப்பு விருந்தினர்களில் ஒருவரான கலாநிதி திரு. ச. பாலகுமார் அவர்களும் இப்பாடசாலையில் ஆரம்பக்கல்வியை கற்றவர் உயிரியல் இரசாயனத்துறையில் பேராசிரியராக விளங்கபலமான அத்திவாரமாக அமைந்தது இப்பாடசாலையில் கற்ற ஆரம்பக்கல்வியே எனவே பழைய மாணவரான அவரையும் சிறப்பு விருந்தினராக அழைத்ததையிட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன்.

நூறு ஆண்டுகளை பூர்த்தி செய்யும் இவ் நூற்றாண்டு விழாவுக்கு பிரதம விருந்தினராகவும், சிறப்பு விருந்தினராகவும், இவர்கள் வருகை தந்ததனால் இவ் விழா மேலும் சிறப்படைந்துள்ளது. சென்றவருடம் 6ஆம் மாதம் அதிபராக பொறுப்பேற்றேன். இந்தவருடம் நூற்றாண்டு விழா நடைபெறுகிறது எனவே நூற்றாண்டு விழா கொண்டாடும் இப்பாடசாலையின் அதிபராக இருந்து மட்டற்ற மகிழ்வுடன் ஆண்டறிக்கையினை சமர்ப்பிக்கிறேன்.

எமது பாடசாலையின் நிறுவுநர் எந் நோக்கத்திற்காக இப்பாடசாலையை நிறுவினாரோ அந்நோக்கம் மேலும் சிறப்பாக முன்னெடுக்கப்படவேண்டும். என்பதற்காக அவர்தம் வழித்தோன்றல்கள் வருடந்தோறும் பரிசளிப்பு விழா செய்வதற்கு ரூபா 450000/= வை நிரந்தர நிதியமாக வைப்புச் செய்து இன்று வழங்கவுள்ளார்கள் இது பாராட்டுக்குரியது மேலும் நூற்றாண்டு விழா சிறப்பாக நடைபெறுவதற்கு நிதியினைத் தந்த வணிக நிறுவன உரிமையாளர்களையும், மதிப்பிற்குரிய பெற்றோர்களையும் நான் பாராட்டுகிறேன. இவ்விழா நிதியிலிருந்து ஒரு பகுதியை குடிநீர்த்தேவையும் மலசலகூட வசதியையும் மேம்படுத்துவதற்கு விழா குழுவினர் அதனை அமைத்து உதவிய பா. அ. சங்க செயலாளரின் கடமையுணர்வும் பாராட்டப்படவேண்டியதாகும்.

மதிப்புமிகு வலயக் கல்விப்பணிப்பாளர் மாணவர்களுக்கு அடிப்படைக் கணனி அறிவை வழங்குவதற்கு கணனிகள் நான்கினையும் பெற்றுத்தந்துள்ளார். எனவே பாடசாலைச் சமூகம் அவருக்கு எனது நன்றிகள். இக்கணனி அறை அமைப்பு வேலைகள் சென்ற வருடஇறுதியில் அப்போதைய பா.அ.சங்க செயலாளர் திருமதி. ர. சச்சிதானந்தமூர்த்தி அவர்கள் முன்னின்று செயற்பட்டு அமைத்துத்தந்தார். கடந்த காலங்களில் பல பெற்றோர்கள் பாடசாலையின் தேவையை அறிந்து பல பொருட்களை அன்பளிப்புச் செய்ததும் இல்ல விளையாட்டுப்போட்டியின் போது தாமாக முன்வந்து சிரமதானப் பணியில் ஈடுபட்டதும் கொலின்ஸ் விளையாட்டுக் கழக சுவிஸ் கிளையினர் மதில்கட்டிக் கொடுத்தும் அவர்கள் இப்பாடசாலை மீது கொண்டுள்ள பற்றை வெளிப்படுத்துகிறது. அத்துடன் இப்படியான செயற்பாடுகளின்போது உபகரணங்கள், பொருட்கள் போன்றவற்றை தந்து உதவிய முன்னர் பா. அ. க. செயலாளர் திரு. க. சிவகுருநாதனின் பாடசாலைப் பற்று உணர்வும் வரவேற்கத்தக்கது. இப்படியான செயற்பாடுகள் இம்மக்கள்

தங்கள் பாடசாலைமீது கொண்டுள்ள பற்றை வெளிப்படுத்துகிறது. என்பதை தெரியப்படுத்தி அறிக்கையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

**கடந்த 3 ஆண்டுகளில் பாடசாலைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட பொருட்களின் விபரம்**

| அன்பளிப்புச் செய்தவர் பெயர் | நோக்கம் | பொருள் (விபரம்) |
|---|---|---|
| 1. 2009 ச. திருஜன் (தரம் 3 மாணவன்) | வகுப்பறைத் தேவை | சுவர்க்கடிகாரம் -01 |
| 2. திருமதி. சி. சச்சிதானந்த மூர்த்தி | தந்தையின் ஞாபகார்த்தம் | Computer -01 (Pentium) |
| ,, | ,, | Moniter (LCD) - 01 (Samsung) |
| ,, | ,, | UPS - 01 |
| ,, | ,, | Mous - 01 |
| ,, | ,, | Key board - 01 |
| 4. 2010 தரம் 5 மாணவர் | பாடசாலைத் தேவை | காற்றடிக்கும்பம் -01 |
| 5. பே. சாந்தினி | வகுப்பறைத்தேவை | சுவர்க்காடிகாரம் - 02 |
| 6. 2011 திரு. ந. செல்வநாயகம் | சையிக்கிள் கொட்டகை | பனை மரம் -03 |
| 7. திரு. இ. தருமலிங்கம் | ,, | பனை மரம் - 02 |
| 8. திருமதி சி. சச்சிதானந்தமூர்த்தி | அலுவலகத்தேவை | HP Printer - 01 |
| 9. திரு. சி. தங்கவேல் | பாடசாலைத் தேவை | தரப்பாள் - 01 |
| 10. திருமதி. ர. சிவகுமாரி | வகுப்பறைத்தேவை | Cabines - 01 |
| 11. திரு. இ. ரஞ்சித்குமார் | சைக்கிள்கொட்டகை | குறுணிக்கல் கியூப் |
| ,, | ,, | மணல் 21 பெட்டி |
| 12. தங்கவடிவேல் | விளையாட்டுப் போட்டி தேவை | வெற்றிபீடம் - 01 |

## 2011 இல் மாணவர் விபரம்

| | | | |
|---|---|---|---|
| தரம் | 1 | - | 35 |
| ,, | 2 | - | 42 |
| ,, | 3 | - | 40 |
| ,, | 4 | - | 36 |
| ,, | 5 | - | 37 |
| மொத்தம் | | | 190 |

## ஆளணி விபரம்

| | அனுமதிக்கப்பட்டது | உள்ளது |
|---|---|---|
| அதிபர் | 1 | 1 |
| ஆசிரியர்கள் | 7 | 6 |
| மொத்தம் | 08 | 07 |

## எதிர் நோக்கும் இடர்கள்

1. போதிய இடவசதி கொண்ட விளையாட்டு மைதானம் இன்மை
2. நூலக வசதி இன்மை
3. பிரிக்கப்பட்ட வகுப்பறைகள் இன்மை

கல்விச் செயற்பாடுகள்

**இந்த வருடம் (2011) தரம் 5 புலமைப் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்கள்**

| | பெற்றபுள்ளி |
|---|---|
| 1. செல்வன் சச்சிதானந்தமூர்த்தி திருஜன் | 175 |
| 2. செல்வன் சிவநேசன் கதுர்ஜன் | 171 |
| 3. செல்வி சிவயோகராசா சாகித்தாரா | 171 |
| 4. செல்வி நளேந்திரன் நிரோஜினி | 165 |
| 5. செல்வி கந்தையா தரணியா | 164 |
| 6. செல்வி சிவயோகராசா சாகித்தியா | 163 |
| 7. செல்வி அருணகிரிநாதன் லோசிதா | 162 |
| 8. செல்வி ரவிச்சந்திரன் மனுசா | 161 |
| 9. செல்வன் ஜெயக்குமார் ஜெதுர்சனா | 161 |
| 10. செல்வன் சிவஞானம் மதுசன் | 158 |
| 11. செல்வன் தவராசன் அர்ஜீன் | 154 |
| 12. செல்வன் நவரத்தினம் விந்துசன் | 152 |

விரைவு கணித கணித்தற்திறன் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்கள்

கோட்டமட்டம்

1. செல்வி அருணகிரிநாதன் லோகிதா
2. செல்வன் நவரத்தினம் விந்துசன்
3. செல்வன் சச்சிதானந்தமூர்த்தி திருஜன்

வலயமட்டம்

1. செல்வி அருணகிரிநாதன் லோகிதா
2. செல்வன் நவரத்தினம் விந்துசன்

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவு முதியோர் தின போட்டி

கட்டுரை (கீழ்ப்பிரிவு)

செல்வி. சிவயோகராசா சாகித்தாரா 1ம் இடம் கரவெட்டி பிரதேச செயலர் பிரிவு சிறுவர் தினப்போட்டி

கட்டுரை (மத்தியபிரிவு) செல்வன் சச்சிதானந்தமூர்த்தி திருஜன் 3ம் இடம்

கவிதை (மத்திய பிரிவு)

செல்வன் சண்முகநாதன் சர்மினி 3ம் இடம்

## நன்றிகள்

இவ்விழாவுக்கு வருகைதந்த பிரதமவிருந்தினர், சிறப்புவிருந்தினர்கள், கல்வியதிகாரிகள், மாணவச்செல்வங்கள், நலன்விரும்பிகள், பழைய மாணவர்கள், அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்து எனது அறிக்கையை நிறைவு செய்கிறேன்

தமிழ்ப்பூங்கா நெல்லியடி 021 -226 4014